# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை

# தடையின்மைச் சான்று

## ஜெ.ஜெ.நகர் தீயணைப்பு-மீட்புப்பணிகள் நிலையம்.

த.சா.எண்:23/2025 நாள்:12.05.2025

ந.க.எண்:156/V/2025

பொருள்: தீயணைப்பு - மீட்புப்பணித் துறை–ஜெ.ஜெ.நகர் தீயணைப்பு– மீட்புப்பணி நிலையம் –பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் வழங்கிட தடையின்மைச் சான்று வழங்குதல் - குறித்து.

பார்வை:
1. அரசு ஆணை எண்.122,பள்ளிகல்வி (2) துறை, நாள்.14.09.2004
2. அரசு ஆணை எண்.123,பள்ளிகல்வி (2) துறை, நாள்.14.09.2004.
3. **THE PRINCIPAL.** என்பரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம், நாள்.02.05.2025.

---

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் விண்ணப்பத்தின்படி கதவு இலக்கம் **PLOT NO. R-40B, 120 FEET ROAD, MOGAPPAIR EAST, CHENNAI – 600 037.** என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள **M/S. D.A.V.SR. SECONDARY SCHOOL.** என்ற பள்ளியினை 06.05.2025 அன்று ஜெ.ஜெ.நகர் நிலைய அலுவலர் **திரு.க.ச.சரவணன்** என்பவரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்விடத்தில் பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் வழங்கிட கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு **(12.05.2025 முதல் 11.05.2028 முடிய)** தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நோக்கிலிருந்து யாதொரு தடையும் இல்லை.

### நிபந்தனைகள்

1. இத்தடையின்மைச்சான்று மூன்றாண்டுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும்.
2. போதுமான தீயணைப்பு கருவிகள் IS 2190:2010ன்படி பொருத்தப்பட வேண்டும். இந்திய தரநிர்ணய சான்றுடன் தீயணைப்பான்களை கண்ணுக்கு முதன்மையாக கவரும் வகையில் பள்ளியின் ஒவ்வொரு பகுதியிலும் நிறுவ வேண்டும்.
3. முதலுதவி சாதனங்கள் உரிய மருந்துகளுடன் உடனடியாக கிடைக்கும் வகையில் பள்ளிகளில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி பிள்ளைகளுக்கான வகுப்பறைகள் தரைத்தளத்தில் மட்டும் நடைபெற வேண்டும்.
5. தலைமை ஆசிரியர் மற்றும் இரண்டு ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் ஒரு தீத்தடுப்பு அதிகாரி இவர்களை கொண்ட தீதடுப்புக்குழு பள்ளியில் அமைக்கப்பட வேண்டும். தீ பாதுகாப்பு திட்டம் ஒன்றை வகுத்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அந்ததிட்டத்தை ஆய்வு செய்ய வேண்டும்.
6. அவசர காலத்தில் பயன்படுத்த கூடிய தொலை பேசி எண்கள் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர்களின் பட்டியல் ஒன்றை பள்ளியின் அறிப்பு பலகையில் ஒட்டுவதுடன் கேந்திரமான அனைத்து பகுதிளிலும் தெளிவாக தெரியும் வகையில் அமைக்க வேண்டும்.
7. மாதிரி பயிற்சிகள் ஒழுங்கு முறையுடன் குறிப்பிட்டகால இடை வெளிகளில் நடத்தப்பட வேண்டும். தீ மணி அனைத்து தளங்களிலும் நிறுவப்பட வேண்டும். அது அனைவருக்கம் புரியும் வகையில் செயல்படுத்தப்பட வேண்டும்
8. பழைய மின்கம்பிகள் மற்றும் சாதனங்களை அகற்றப்பட்டு இந்திய தரநிர்ணய சான்றுடன் புதியமின் அமைப்புகள் நிறுவப்பட வேண்டும்.
9. அதிகமின் அழுத்தம் கொண்ட மின்கம்பிகள் பள்ளியின் உள்ளோ அதன் அருகாமையிலோசெல்ல கூடாது. எவையேனும் இருப்பின் அவைகளை உடனடியாக அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

10. ஆசிரியர்கள் மற்றும் இதரபணியாளர்களுக்கு பாதுகாப்பு சாதனங்களை இயக்குதல், அவசர காலங்களில் வெளியேற்றும் முறைகள், தீ விபத்து அல்லது மற்ற நெருக்கடியான சமயங்களில் மாணவர்களை காப்பாற்றுவது குறித்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
11. தீயணைப்பு மற்றும் மீட்பபுப்பணித் துறையின் ஆலோசனை மற்றும் ஒப்புதலுடன் அவசரகால மீட்புப்பணி திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். மேலும் பள்ளியில் பாதுகாப்பு ஆலோசனை குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.
12. நெருக்கடி அமைப்புகளில் எவ்வாறு செயல் படுவது என்பது குறித்து மாதிரி பயிற்சிகள் குறிப்பிட்ட இடை வெளியில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பயன் பெறும் வகையில் நடத்தப்பட வேண்டும்.
13. ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 14-ம் தேதியை தீ பாதுகாப்பு நாளாக ஒவ்வெரு பள்ளியிலும் அனுசரிக்கப்பட்டு அன்றைய தினம் தீ விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் தீ பாதுகாப்பு பயிற்சிகளை தீயணைப்பு-மீட்புப்பணி குழுவினருடன் இணைந்து நடத்த வேண்டும்.
14. அனைத்து பள்ளிகட்டிடங்களிலும் தீ மற்றும் இயற்கை பேரழிவுகளுக்கு எதிராக மாணவர்கள் உள்ளடக்கி தொகுப்பு ஈட்டுறுதி திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.
15. தரைகீழ் தளத்தில் (Basemnts) வகுப்புகள், ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள் மற்றும் ஒன்று கூடுமிடம் (Assembly Hall) அமைத்திட தடை செய்யப்படுகிறது.
16. அனைத்து தளங்களிலும் அவசர காலங்களில் விரைவாக வெளியேறும் வகையில் அவசரகால வழி அமைத்திட வேண்டும்.
17. 45 மாணவர்களுக்கு மேல் உள்ள வகுப்பறைகளுக்கு குறைந்தபட்சம் இரு வழிகதவுகள் அமைக்கப் படவேண்டும்.
18. அனைத்து கதவுளும் வெளிப்புறமாக திறக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்
19. கேஸ் பைப் லைன் படிக்கட்டுகள் ஒட்டி அமைக்கக் கூடாது.
20. படிக்கட்டுகளின் அகலம் குறைந்தப்பட்சம் 30cm, உயரம் 15cm, இருக்க வேண்டும்.
21. மாடிப்படிகள் மற்றும் வெளியேறும் வழிகளில் உள்ள விளக்குகள் தனிமின்சுற்றுடன் அமைக்கப்பட வேண்டும்.
22. Miniature Circuit Breakers/Earth Leakage Circuit Breakers நிறுவப்பட வேண்டும்.
23. உரிய பாதுகாப்பு முறையுடன் கட்டிடத்தில் இடிதாங்கி நிறுவப்பட வேண்டும்.

**அரசு விதி மீறல்கள் மற்றும் மேற்குறிப்பட்டுள்ளநிபந்கனைகள் பூர்த்தி செய்யப்பட வில்லை எனில் வழங்கப்பட்ட தடையின்மைச்சான்று தானாகரத்தாகிவிடும் எனதெரிவிக்கப்படுகிறது.**

தீயணைப்பு-மீட்புப் பணிகள் நிலையம் ஜெ.ஜெ.நகர், சென்னை-37.
12 MAY 2025

12/05

நிலைய அலுவலர்
தீயணைப்பு-மீட்புப்பணிகள் நிலையம்
ஜெ.ஜெ.நகர், சென்னை-37.

பெறுநர்:

**M/S: THE PRINCIPAL,**
**D.A.V. SR. SECONDARY SCHOOL,**
**PLOT NO. R-40B, 120 FEED ROAD,**
**MOGAPPAIR EAST, CHENNAI – 600 037.**

நகல்: மாவட்ட அலுவலர், மத்திய சென்னை மாவட்டம்.